1968 பிப்ரவரி 19]

குறைந்தபட்சம் இவ்வளவு 'ஃபீட்', 'இஞ்சஸ்', 'யார்ட்ஸ்' என்று மாற்றியமைக்கவாவது ஏதாவது உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது இருக்கிற சங்கடமான நிலைமை அடிப்படையில் 'ஹெக்டர்' என்று விஸ்தீர்ணத்தை குறிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சட்டம் செய்திருக்கிறது. அதற்காகத்தான் காலம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மாநிலத்தில் இருக்கும் முறையை மெட்ரிக் முறைக்குக் கொண்டுவருவதில் நடைமுறையில் கஷ்டங்கள் இருக்கின்றன.

## கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகிலுள்ள காட்டுப் புறம்போக்கு

*76 வின—**திரு. என். [redacted]சங்கரய்யா :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடு புறம்போக்கு 213 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்கும்படி நிலமற்ற விவசாயிகளிடமிருந்து அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (*a*) & (*b*) The petition referred to by the Member was forwarded to the District Revenue Officer, Ramanathapuram, for necessary action (in Government Memorandum No. 105624 F2/67-1, Revenue( dated 16th November 1967).

**திரு. என். சங்கரய்யா :** ஐயா, இப்பொழுது மனுச் செய்து கொண்டவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள். காட்டுப் புறம் போக்கு நிலங்களை அவர்கள் சாகுபடி செய்ய உரிமை கொடுக்க அரசாங்கம் மாவட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் வருவாய்த் துறையினர் இராமநாதபுரம் அதிகாரிக்கு 16-11-1967 அன்று அரசாங்கத் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது. அதன் மீது நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் மூல வினாவை ஒட்டி, 'தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடுபுறம் போக்கு . . . . நிலத்தைச் சாகுபடிக்குக் கொடுக்கும்' தகவல் பற்றி ஒரு துணை வினாவைக் கேட்பார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இது சம்பந்தப் படாத கேள்வியாக இருந்தாலும் கூட, பட்டா வழங்குவது முக்கிய விஷயம். அதைப் பற்றித்தான் திரு. சங்கரய்யாவின் கேள்வி இருக்கிறது என்று நினைக்கிறேன். பட்டா வழங்கு வதில் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு, பெரிய நிலக்காரர் களுக்குக் கொடுக்காவிட்டாலும், உடனடியாக பட்டாக்கள் வழங்கத்தக்க சிபாரிசுகளை சர்க்கார் அதிகாரிகளுக்கு அனுப்பு வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவரங்களை ரெவின்யூத் துறை விவாதத்தின்போது எடுத்துச் சொன்னால், அதற்கான வழிவகை காண உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

*Special exhibition of manuscripts*

* 77 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a cotton package programme would be extended to about 60,000 acres of land in Pollachi and Erode divisions ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 5.80 லட்சம் பேல் அளவிற்கு கச்சாப்பருத்தி உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் இந்த வேலைத் திட்டம் 1967-68-ம் ஆண்டுக்காலத்தில் ரூ. 1,47,740 மதிப்பீட்டுச் செலவில் செயல் படுத்தப்படும். இந்த வேலைத் திட்டத்தின் கீழ், குடியானவர் களுக்குக் கூடுதல் கடன் வசதிகள் கிடைக்கும்; உரங்களும், தர விதைகள் முதலிய தேவைப் பொருள்களும் தவறுமல் கிடைக்க வகை செய்யப்படும்.

திரு. கே. விநாயகம் : பாக்கேஜ் ப்ரொக்ராமின்படி பருத்தி உற்பத்தி செய்கிற விவசாயிகள் எத்தனை பேருக்கு லாபம் கிடைக்கும் ? அவர்கள் இதற்காக ஏற்கனவே எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்கிற விதிகள் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதனால் எத்தனை விவசாயிகள் நன்மை அடைகிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரம் இப்பொழுது என்னிடம் கிடையாது. எவ்வளவு ஏக்கரில் பருத்தி விளைகிறது என்ற தகவல்தான் கொடுக்க முடியும். அந்த அளவில், கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களில், பாசன வசதியோடு, குளிர் காலக் கம்போடியா பருத்தி 80,000 ஏக்கர் நிலங்களில் பயிராகும். இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில், கோடை காலக் கம்போடியா பருத்தி 50,000 ஏக்கர் நிலங்களில் பயிராகும். திருச்சி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் நஞ்சை நிலத்தில் நெல்